# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

759, அண்ணாசாலை, சென்னை – 600 002.

## 49வது ஆண்டு பொதுக்குழு கூட்டம்

## பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

இக்கழகத்தின் 49–வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் கீழ்க்கண்ட அலுவல்களை கவனிப்பதற்காக சென்னை–2, அண்ணாசாலை, எண் 759ல் அமைந்துள்ள பூம்புகார், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தலைமை அலுவலகத்தில் (டி.வி.எஸ் எதிரில்) 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் நாள் வியாழக்கிழமை (திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது வருடம், புரட்டாசி மாதம் 12 ஆம் நாள்) காலை 11.30 மணியளவில் நடைபெறும் என பங்குதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**சாதாரண அலுவல்கள்:**

அ) இயக்குநர்கள் அறிக்கை, தணிக்கை செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளுடன் முடிவடைந்த ஐந்தொகைக் கணக்குக் குறிப்பு, 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதாய இழப்புக் கணக்கு ஆகியவற்றை பரிசீலித்து ஏற்பளித்தல்.

ஆ) 2022–23 ஆம் நிதி ஆண்டிற்காக நியமனம் செய்யப்படும் சட்டபூர்வ தணிக்கையாளர்களுக்கு தணிக்கைக் கட்டணம், பயணப்படி மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றை நிர்ணயம் செய்தல்.

இடம் : சென்னை–2 **திருமதி வெ. ஷோபனா, இ.ஆ.ப.,**

நாள் : 08.09.2022 **மேலாண் இயக்குநர்**

குறிப்பு: மேற்கண்ட கூட்டத்தில் கலந்துகொண்டு ஓட்டளிக்கத் தகுதியுடைய ஒவ்வொரு உறுப்பினரும் தனக்கு பதிலாக தன் சார்பாக வேறு ஒருவரை கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்க உரிமையுடையவராவார். அவ்வாறு அவருக்கு பதிலாக கலந்து கொள்பவர் இக்கழகத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதில்லை. பதிலாக வரும் நபர் உறுப்பினரின் அத்தாட்சி கடிதத்துடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.